# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 202/ந/2024

நாள். 19.09.2025

திரு. C. நாராயணமுர்த்தி,
திருத்துறைப்பூண்டி,
திருவாரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, சண்முகம் செட்டி தெரு, எண்.7/1A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C. நாராயணமுர்த்தி, என்பவரது 28.10.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.10.2024 அன்று பெறப்பட்டு, 202/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, சண்முகம் செட்டி தெரு, எண்.7/1A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C. நாராயணமுர்த்தி, என்பவரது 28.10.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"I am presently residing at No.7/1A, Shanmugam Chetty Street, Thiruthuraipoondi, Thiruvarur District. I have purchased the possessory right of the land to an extent of 10 cents together with thatched building comprised in R.S.No.180/11, North Street, Thiruthuraipoondi Town, from the legal heirs of N. Arunachala Mudaliar by Sale deed dated 08.03.1993, registered as document no:1147 of 1995, with SRO Thiruthuraipoondi. Subsequently I demolished the

thatched building and constructed a RCC building. The above said property was marked as "ABCD" in the rough sketch.

I submit that S.No.180/10 which is an extent of 10,028 Sq.Ft was situated on the western side of my property, and the said property was originally owned by one Mr. T.S.Rajram Mudaliar, and after his demise his daughter Mrs. Jayalakshmi sold the said property to one Chinappa vide Sale deed dated:27.03.2009, registered as Doc.No.804 of 2009 with SRO Thiruthuraipoondi. Subsequently the said Mr.Chinappa sold the said property to one Dr.S. Jeeva and his wife Dr. Devi vide Sale Deed dated:23.01.2020 registered as Document No.115 of 2020, with SRO Thiruthuraipoondi. The said property was marked as "EFGH" in the rough sketch.

I Submit that in between my property that is "ABCD" & the property of Mr. Jeeva & Mrs. Devi i.e. "EFGH" in which there is a Lane (i.e.3 Feet width and 90 Feet length) in north to south direction and the said lane was marked as "BGDE". I further submit that the said Arunachala Mudaliar filed a suit against Mr. T.S.Rajaram Mudaliar in O.S.No.565/1971, before the District Munsiff court, Thiruthuraipoondi, for declaration, Subsequently the said Mr.Arunachala Mudaliar and Mr. T.S.Rajaram Mudaliar entered a compromise and filed a joint compromise memo before the District Munsiff court, Thiruthuraipoondi. The Court also passed compromise decree, dated:03.12.1973 on the following and other terms and conditions:-

**"Both the parties shall enjoy the common lane without any disturbance to others"**

The said compromise decree binds the parties to the case and subsequent purchaser of the said property from the above said Mr Arunachala Mudaliar and Mr. T.S.Rajaram Mudaliar.

I submit that the present owners Mr. Jeeva & Mrs. Devi are constructing a hospital building, Stilt + 3 Floors on the property belonging to them which is marked as "EFGH" in contravention to the building plan approval and other approvals given by the Commissioner of Municipality and Deputy Director of DTCP, Thiruvarur. I further submit that now they have completely violated the planning permission and raised pillar in the said common lane, which is marked as "BGDE" in the rough sketch.

I submit that the said hospital building comes under the purview of public building which ought to have been comply the following

- Set back space to be provided with 6 – meter width vacant space surrounding the building.
- Provide sufficient space for the access of fire fighting vehicles.

- Set back area should be free of any obstructions, such as fountains, statues, flower pots, decorative idols, ramps etc., to facilitate movement of vehicles and people during emergency.

I submit that the opposite parties have not complied the above mandatory guidelines. The said Mr. Jeeva and Mrs. Devi violated the Tamil Nadu Combined Development and Building rules, 2019 and Tamil Nadu Town and Country Planning Act, 1971 and the building plan approval given by the competent authority.

Hence, I raised objections and requested Mr. Jeeva and Mrs. Devi to construct the hospital building as per the regulations and guidelines. They have disregarded the rules, regulations, approvals and proceeded with further construction and raised several huge pillars in the common lane provided for peaceful enjoyment of the adjacent property owned by me. Therefore, I lodged a complaint with Town Police Station Thiruthuraipoondi, Commissioner of Municipality, Thiruthuraipoondi, and Deputy Director – DTCP, Thiruvarur. The Police officials instructed them not to proceed further construction in contravention to the building plan approval till the issue is being decided by the competent authority. However, knowing fully well of the violation committed by the said doctors, the commissioner of Municipaliaty. Thiruthuraipoondi and Deputy Director of DTCP, Thiruvarur have not taken any legal action on my complaint.

Hence, I request you to lock and seal the building under construction and direct them to remove the offending construction.

2. மனுதாரது புகார் குறித்து திருத்துறைபூண்டி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 08.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. திருத்துறைபூண்டி நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.211/2022/எப்1/, நாள் 14.07.2025–ன் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விவரங்களை தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு –20, பிளாக் 12, நகரளவை எண்கள்.70/2ஏ, 70/2பி (பழைய புல எண்.180/10 பகுதி)ல் 925.00 சதுரமீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருவாரூர் அவர்களால் ம.வ./மா.ந.ஊ.ஆ(டி.வி.ஆர்) எண்.01/2022 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மருத்துவமனை கட்டிடத்திற்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் நாள் 25.01.2022ல் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது.

மேற்கண்ட கட்டிடத்தின் கட்டுமானப்பணி நடைபெற்று வரும் நிலையில் திரு.சி.நாராயணமூர்த்தி த/பெ.செல்லையா சண்முகம் செட்டி தெரு, திருத்துறைப்பூண்டி என்பவரால் மேற்படி கட்டிடமானது விதிகளை மீறி கட்டப்பட்டு வருவதாக தங்களுக்கு புகார்

அளிக்கப்பட்டதின் அடிப்படையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ அலுவலக மின்னஞ்சல் கடிதம் நாள் 08.11.2024 வாயிலாக நடவடிக்கை விவரம் கோரப்பட்டதின் அடிப்படையில், இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மூலமாக 23.12.2024 அன்று நேரடி தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு குறிப்பு பெறப்பட்டு அதன் அடிப்படையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், 1998 மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன் கீழ் சட்டப் பிரிவு 134,135 (1)(2) (6)ன்படி அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கான அறிவிப்பு மருத்துவமனை கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மருத்துவனை கட்டிட உரிமைதாரர் மேற்படி அறிவிப்பு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மாறுபாட்டு கட்டுமானத்திற்கு திருத்திய வரைபடம் சமர்ப்பித்து அனுமதி பெற்றுகொள்வதாகவும் எவ்வித மேல்நடவடிக்கை தொடரவேண்டாம் எனவும், மேற்படி திருத்திய வரைபட அனுமதி பெறுவதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்க கோரி 07.01.2025–ல் கடிதம் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் திரு.சி.நாராயணமூர்த்தி என்பவர் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வடக்கு வீதியில் புதிதாக கட்டப்பட்டுவரும் மருத்துவமனை கட்டிடம் தொடர்பாக Tamilnadu Localbodies Ombudsman, Chennai அவர்களுக்கு புகார் அளித்திருந்தேன். அதனை தான் திரும்பபெற்றுக்கொள்வதாகவும் மேலும் தான் அளித்த புகார் மீது எவ்வித மேல் நடவடிக்கையும் மேற்கொள்ளவேண்டாம் எனவும் எழுத்து பூர்வமாக இந்நகராட்சி அலுவலகத்திற்கும் தங்கள் அலுவலகத்திற்கும் முகவரியிட்டு புகார்தாரர் கடிதம் அளித்துள்ளார்.

இந்நிலையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற அலுவலக தொலைபேசி தகவல் நா. 05.07.2025–ல் மேற்கண்ட மருத்துவமனை கட்டிடம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தினை அறிக்கையாக அனுப்ப கோரப்பட்டது. அதன்படி மேற்கண்ட கட்டிடம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் அறிக்கையாக உரிய ஆவணங்கள் இணைத்து அனுப்பப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

4) மேலும், கட்டிட உரிமையாளர்களான Dr.S.ஜீவா மற்றும் Dr.J.தேவி ஆகியோர் தங்களது 07.01.2025 நாளிட்டு திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையருக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் நகலினை நகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். மேற்படி கடிதத்தில் “நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருவாரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1000/2021/TVR, நாள்.07.01.2022ன் மூலம் எனக்கு சொந்தமான இடத்தில் மருத்துவமனை கட்டிடம் கட்ட, கட்டிட அனுமதிக்கான தொழில்நுட்ப அனுமதி பெற்று அதன் அடிப்படையில் நகராட்சி ஆணையர், திருத்துறைப்பூண்டி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.211/2022/எப்1, நாள் 25.01.2022ன் மூலம் இறுதி கட்டிட அனுமதி பெற்று, மருத்துவமனை கட்டிடம் கட்டி வரும் நிலையில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பு கடிதம் நாள் 23.12.2024ல் அனுமதிக்கு மாறாக கட்டப்படுவதாக அளவுகள் குறி.பிட்டு அறிவிப்பு கடிதம் பெறப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள அளவிற்கு திருத்திய வரைபடம் சமர்ப்பித்து அனுமதி பெற்று விடுகிறேன். தற்போது என்னுடைய

உடல்நிலை சரியில்லாததால் தற்காலிகமாக கட்டுமான வேலையை நிறுத்தி வைத்துள்ளேன். ஆகையால் மேற்கண்டுள்ளவாறு திருத்திய வரைபடம் சமர்ப்பிக்க 6 மாதகாலம் அவகாசம் வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

கட்டிட அனுமதியில், கட்டிடம் கட்டி முடிப்பதற்கான கால அளவு 24.01.2027 வரை உள்ளது. மேலும், மேற்கண்டுள்ள பதிலினை ஏற்று, மேல் நட்வடிக்கை தொடர வேண்டாம் எனவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5)மனுதாரர் தனது நாளிடப்படாத கடிதத்தில் இம்முறைமன்ற நடுவத்திற்கு முகவரியிட்டு அக்கடிதம் திருத்துறைப்பூண்டி நகராட்சி அலுவலகத்தில் 25.04.2025ல் பெறப்பட்டு, அதனை திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். மேற்படி கடிதத்தில், ''திருத்துறைப்பூண்டி நகரம் வடக்கு வீதியில் மருத்துவர்கள் திரு.S.ஜீவா மற்றும் திருமதி.தேவி ஆகியோரால் புதிதாக கட்டப்பட்டு வரும் மருத்துவமனை கட்டிடம் விதிகளை மீறி கட்டப்படுவதாக நான் அளித்த புகார் மனுவினை திரும்பப்பெற்றுக்கொள்கிறேன். ஏனெனில் அங்கு எவ்வித விதிமீறலும் நடைபெறவில்லை. நான் தவறாக அளித்த மேற்படி புகார் மீது எவ்வித மேல் நடவடிக்கையும் வேண்டாம் என மனப்பூர்வமாக கேட்டுக்கொள்கிறேன்'' எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) மனுதாரர், எதிர்மனுதாரரான திருத்துறைபூண்டி நகராட்சி ஆணையர் மற்றும் 2ம் எதிர்மனுதாரரான மருத்துவமனை உரிமையாளர்களை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.07.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7) மனுதாரர் திரு. C.நாராயணமூர்த்தி மற்றும் அவரது வழக்கறிஞர் திரு.R.சத்தியமூர்த்தி ஆகியோர் 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளனர்:

"திருத்துறைப்பூண்டி நகராட்சி, வடக்கு வீதியில் டாக்டர். ஜீவா மருத்துவமனை கட்டிடம் உள்ளது. இந்த மருத்துவமனை கட்டிடத்திற்கு கிழக்குப்பக்கத்தில் எனக்கு சொந்தமான இடம் உள்ளது. இந்த மருத்துவமனை கட்டிடம் நான்கு பக்கமும் போதுமான இடைவெளி (Set back) விடாமல் கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு மாறுபட்டுள்ளது. விதிமீறி கட்டப்பட்டுள்ள மேற்படி கட்டிடத்தினை வரன்முறைப்படுத்த எதிர் மனுதாரரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்'' என தெரிவித்துள்ளனர்.

8) எதிர் மனுதாரராகிய திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையர் சார்பாக திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நகரமைப்பு ஆய்வராக பணிபுரியும் திரு.அருள் முருகன் என்பவர் 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்:-

"திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு 20, பிளாக் 12, நகரளவை எண்கள் 70/2எ, 70/2பி (பழைய புல எண்.180/10 பகுதி)-ல் 925 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருவாரூர் அவர்களால் ம.வ./மா.ந.ஊ.ஆ.(டிவிஆர்) எண்.01/2022 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மருத்துவமனை கட்டிடத்திற்கு திருத்துறைப்பூண்டி நகராட்சியால் 25.01.2022-ல் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை கட்டிடத்திடன் தரைதளத்தில் விதிமீறல்கள் எதுவும் இல்லை. ஆனால் பின்னர் கட்டப்பட்ட முதல் தளம் இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களில் விதிமீறல்கள் உள்ளன. எனவே கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 134 மற்றும் 135 (1) மற்றும் (6)-ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என தெரிவித்துள்ளார்.

9) 2ம் எதிர்மனுதாரரான மருத்துவமனை உரிமையாளரின் சார்பாக திரு.C.சிவபுண்ணியம் என்பவர் 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

எங்களது மருத்துவமனை கட்டிடம் விதிமீறிக் கட்டப்படுவதாக திருத்துறைப்பூண்டி நகராட்சியினரால் வழங்கப்பட்ட நோட்டீஸ் பெற்றவுடன் தற்காலிகமாக கட்டிடம் கட்டும் பணியினை நிறுத்தி வைத்துள்ளோம். மேற்படி கட்டிடத்தினை வரன்முறைபடுத்த திருத்திய வரைபட அனுமதிக்கு கோரி விண்ணப்பித்து, திருத்திய வரைபட அனுமதி பெறப்பட்டவுடன் கட்டிடம் கட்டும் பணியினை தொடர்கிறோம் என்றும் அதுவரை நாங்கள் மேற்படி மருத்துவமனை கட்டும் பணியை தொடர மாட்டோம் என்று இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் மேற்படி கட்டிடத்தினை வரன்முறைப்படுத்த எங்களுக்கு ஆறுமாத காலம் அவகாசம் வழங்கி உதவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்.

10) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையாளர் சார்பாக விசாரணைக்கு ஆஜரான நகரமைப்பு ஆய்வர் திரு.அருள் முருகன் என்பவரின் வாக்குமூலம், 2-ம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளரின் கடிதம் மற்றும் அவரது சார்பாக விசாணைக்கு ஆஜரான திரு.C.சிவபுண்ணியம் என்பவரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது புகார் மனுவில் திருத்துறைப்பூண்டியில் Dr.S.ஜீவா மற்றும் Dr.தேவி ஆகியோரால் மருத்துவமனை கட்டிடம் விதிகளை மீறியும், கட்டிடத்தை சுற்றி இடைவெளி விடாமலும், வாகன நிறுத்துமிடம் வசதியில்லாமலும், Tamil Nadu Combined Development and Building rules, 2019 and Tamil Nadu Town and Country Planing Act, 1971யை மீறி நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்படும் மேற்படி மருத்துவமனை கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு–20, பிளாக் 12, நகரளவை எண்கள் 70/2ஏ, 70/2பி (பழைய புல எண்.180/10 பகுதி)ல் 925.00 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருவாரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1000/2021/டிவிஆர் நாள் 07.01.2022–ல் ம.வ./மா.ந.ஊ.அ.(டிவிஆர்) எண்.01/2022–ன்படி நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மருத்துவமனை கட்டிடத்திற்கு திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையர் அவர்களின் 25.01.2022 நாளிட்ட செயல்முறையில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதும், மனுதாரரின் புகாரின் அடிப்படையில் திருத்துறைப்பூண்டி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மூலமாக 23.12.2024 அன்று நேரடி கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நகரமைப்பு ஆய்வாளரின் குறிப்பு பெறப்பட்டு அதனடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023ன் கீழ் சட்டப்பிரிவு 134,135 (1) (2) (6)ன்படி அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கான அறிவிப்பு மருத்துவமனை உரிமைதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும் மாறுபாட்ட கட்டுமானத்திற்கு திருத்திய வரைபடம் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்வதாகவும் எவ்வித மேல் நடவடிக்கையையும் தொடர வேண்டாம் எனவும், மேற்படி திருத்திய வரைபட அனுமதி பெறுவதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்க கட்டிட உரிமையாளர் கோரியுள்ளதும் திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து அறியமுடிகிறது.

மருத்துவமனை கட்டிடம் விதிமீறிக்கட்டப்படுவதாக திருத்துறைப்பூண்டி நகராட்சியினரால் வழங்கப்பட்ட நோட்டீஸ் பெற்றவுடன் தற்காலிகமாக கட்டிடம் கட்டும் பணியினை நிறுத்தி வைத்துள்ளோம் என்பதும், கட்டிடத்தினை வரன்முறைப்படுத்த திருத்திய வரைபட அனுமதிக்கு கோரி விண்ணப்பித்து, திருத்திய வரைபட அனுமதி பெற்றவுடன் கட்டிடம் கட்டும் பணியினை தொடர்கிறோம் என்பதும், அதுவரை மேற்படி மருத்துவமனை கட்டும் பணியை தொடர மாட்டோம் எனத்தெரிவித்திருப்பது கட்டிட உரிமையாளர் சார்பாக ஆஜரான திரு.சிவபுண்ணியம் என்பவரது வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில் திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம் ஆகிவற்றில் தெரிவித்துள்ளவாறும், மாண்பமை உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற ஆணைகளை அனசரித்தும், உரிய சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், மேற்கண்ட கட்டிடம் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019ன்படி கட்டப்படுவதை மீண்டும் கள ஆய்வு செய்து உறுதி செய்திடுமாறு

திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 19–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. C.நாராயணமூர்த்தி,
த/பெ. செல்லையா,
எண்.7/1A, சண்முகம் செட்டி தெரு,
திருத்துறைத்பூண்டி,
திருவாரூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
திருத்துறைத்பூண்டி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம்.

3) Dr.ஜீவா,
ஜீவா மருத்துவமனை,
ரீசர்வே எண்.180/10,
தெற்கு வீதி,
திருத்துறைப்பூண்டி டவுன்,
திருத்துறைப்பூண்டி.
திருவாரூர் மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032

26/9/25
செயலாளர்